**BAHAGIAN A**
(30 நிமிடம்)

**செய்யுளும் மொழியணியும்**
[20 புள்ளி]

வினாக்களுக்கு **A,B,C,D** எனும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. தூண்டல் பகுதி கொடுக்கப்பட்டிருந்தால் அதிலுள்ள விவரங்களைக் கூர்ந்து கவனித்து வினாக்களுக்கு **மிகச் சரியான** விடையைத் தெரிவு செய்க.

கேள்வி 1 முதல் 3 வரை **இரட்டைக்கிளவி** தொடர்பான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

1 கீழ்க்காணும் வாக்கியத்தில் விடுபட்ட இரட்டைக்கிளவிகளைத் தெரிவு செய்க.

"சிலுசிலுவென வீசிய காற்றில் மரக்கிளைகள் __________வென முறிந்து விழுவது போல் இருந்ததால் நவீனா ___________வென வீட்டை நோக்கி நடந்தாள்."

A கிடுகிடு , விறுவிறு
B சடசட , விறுவிறு
C விறுவிறு , சடசட
D சடசட , துருதுரு

2 வகுப்பறையில் ஓயாமல் ___________வென பேசிக் கொண்டிருந்த முத்துவை ஆசிரியை கண்டித்தார்.

A வெடவெட
B தொண தொண
C கடகட
D விறுவிறு

3 கீழ்க்காணும் படத்திற்குப் பொருந்திய இரட்டைக்கிளவியைத் தெரிவு செய்க.



A கிடுகிடு
B கடகட
C பரபர
D நசநச

LIVEWORKSHEETS

கேள்வி 4 முதல் 6 வரை **இணைமொழி** தொடர்பான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

4 **ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நல்லறிவைப் போதிப்பவர்கள். ஆக, மாணவர்கள் ஆசிரியர்களிடத்தில் ____________________ நடந்து கொள்ள வேண்டும்.**

A கள்ளங் கபடத்தோடு
B அடக்க ஒடுக்கத்தோடு
C அகமும் புறத்தோடு
D தங்கு தடையோடு

5 "எந்தவொரு _____________ ஏற்பட்டாலும் என் இலட்சியத்திலிருந்து பின்வாங்கப் போவதில்லை," என்று தமயந்தி சபதமெடுத்தாள்.

A நோய் நொடி
B உயர்வு தாழ்வு
C தங்கு தடை
D ஈடு இணை

6 நாம் பிறருடன் பழகும்பொழுது ________________ பார்க்காமல் இருந்தால் அவர்கள் நம் மீது மிகுந்த பற்றும் பாசமும் வைத்திருப்பர்.

A உயர்வு தாழ்வு
B அகமும் புறமும்
C தங்கு தடை
D நோய் நொடி

கேள்வி 7 முதல் 9 வரை **உவமைத்தொடர்** தொடர்பான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

7 கீழ்க்காணும் சூழலுக்கு ஏற்ற உவமைத்தொடரைத் தெரிவு செய்க.



A தாயைக் கண்ட சேயைப் போல
B வேலியே பயிரை மேய்ந்தாற் போல
C இலவு காத்த கிளி போல
D உள்ளங்கை நெல்லிக்கனி போல

LIVEWORKSHEETS